
**தமிழ் மொழி மற்றும் இலக்கியத்தின் சமகாலத்தன்மை**
**மலர் 4 இதழ் 1, 2023**
**ராமச்சந்திர கல்வி மற்றும் விளையாட்டு அறக்கட்டளை பதிப்பகம்**
**பன்னாட்டுத்தரப்புத்தக எண்: 978819 4845959**
**இணையதளம்: https://restpublisher.com/book-series/ctll/**
**DOI: https://doi.org/10.46632/ctll/4/1/5**



# இலக்கியங்களில் கவிஞன்

**செ.ஹேமலதா**
*சேக்ரட் ஹார்ட் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பேரணி, இந்தியா.*
*மின்னஞ்சல்:* drhemalathasoundararajan@gmail.com

*கவிஞன் என்பவன் மேன்மை பெறுகின்ற வகையில் மக்களுக்கு இனிய கருத்துகளை அளிக்க வல்லவன் எனலாம் கவிஞனுக்கு அடிப்படையாக அனைத்து உயிர்களையும் நேசிக்கும் எண்ணமும் சமமாக என்னும் மனமும் இருக்கின்றது உள்ளத்து உணர்வு தம்மை மறந்து வெளிக் கிளம்பி சென்ற பொழுது கவிதை உருவெடுக்கின்றது இயற்கையில் சூழலில் கவிஞன் தன் நெஞ்சைப் பறி கொடுக்கிறான் அப்பொழுதும் சமுதாய ஏற்றத்தாழ்வுகளை அவன் உள்ளம் அடிபட்டு பெறுகின்ற பொழுது தலைசிறந்த கவிதைகள் உற்று இருப்பது உண்டு. இந்த வகையில் இலக்கியங்களில் கவிஞர்களை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது*

## 1. கவிஞன் என்பவன் யார்

*கவிஞன் என்பவன் ஒரு கலைஞன் தன் கருத்தால் மக்களின் உள்ளங்களை நன்கு ஆள்பவன் உண்மை கவிஞன் என்றும் மறைவதில்லை காலத்தையும் கடந்து நிற்பான் கவிஞனைப் பற்றி அறிஞர் குறிப்பிடுகையில்*

*“ பிரம்மனும் அவனுக்கு நிகர் இல்லை”*

*(பரந்தாமனார் ஆக்கி கவிஞராக பக்கம் 40)*

*என்பர்*

*கவிஞன் கற்பனைச் சிறகு கொண்டு அதன் கலை உலகில் பறக்கும் பொழுது எண்ணற்ற கவிதைகளை இலக்கிய உலகிற்கு தருகிறான் கவிதைகளின் வாயிலாக அவன் தனது தனித்தன்மைகளை நிலைநாட்டுகிறார் அவனுடைய உலகில் ஏழை பணக்காரன் என்னும் பாகுபாடு இல்லை, எதிர்ப்பு சக்திகள் இல்லை, சாதி சமயப் பாகுபாடுகள் இல்லை*

*அங்கு ;*

*“ எல்லோரும் ஓர் குலம் எல்லோரும் ஓர் நிறை*

*எல்லோரும் இந்நாட்டு மன்னர்”*

*(பாரதியார் கவிதைகள் பக்கம்- 150 )*

*என்னும் பொதுமை எண்ணம் மேலோங்கி நிற்க காண்கிறோம் எனவேதான் கவிஞன் காலத்தையும் தூரத்தையும் கடந்து வாழ்கிறான்*

## 2. கவிஞனின் இலக்கணம்

*ஆங்கில அகராதி கவிஞனின் இலக்கணம் கூறுகிறது அதனை ;*

*“கவிஞன் ஆனவன் உயர்ந்த கற்பனைத் திறனும் விரிந்த நல்ல நோக்கும் உடையவன் ஆகியவற்றை உலகுக்கு சொல்லத் தெரிய எடுத்து விளக்கு பவனாவும் இருக்கவேண்டும் என கூறுகிறது*

The concise Oxford dictionary of current English page-. 882.

## 3. திருவள்ளுவர்

கவிஞன் என்பவன் தான் மட்டும் அனுபவிப்பதாக இருக்கக்கூடாது

முடியாது தாம் பெற்ற இன்பம் போல உலக மக்களும் இன்பம் பெறவேண்டும் என்று எண்ணுபவன் இறை நலம் பெற்ற கவிஞன் அவன் இதனை

தாமின் புறுவது உலகின் புறக்கண்டு காமுறுவர் கற்றறிந் தார்

திருக்குறள்

399

இலக்கியங்களில் கவிஞர்

கவிஞன் என்ற சொல்லை பயன் படுத்துவதற்கு முன்பு சங்க காலத்தில் புலவர் என்ற சொல் வழக்கில் இருந்துள்ளது பழைய இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில் புலவரைப் பற்றிய குறிப்பிடப் பட்டுள்ளதை ,

"நல்லிசைப் புலவர் செய்யுள் உறுப்பென

வல்லிதிற் கூறி

வகுத்துரைத் தனரே"

(தொல்- பொருள் செய்யுள் -நூற்பா -1259 )

"தோல் என மொழிப தொன் மொழிப் புலவர்" (தொல்-பொருள்- செய்யுள் -நூற்பா 1494 )

"புலன் என மொழிப புலன் உணர்ந்தோரே

(மேலது நூற்பா -1497 )

"நூல் என மொழிப நுணங்கு மொழிப் புலவர் "

(தொல் -பொருள்- மரபியல்- நூற்பா 1598 )

தொல்காப்பியர் காலத்தில் வாழ்ந்து புலமை நிறைந்த நற்புலவர்கள் என்று குறிப்பிட பட்டவர்கள் இன்று கவிஞர் என அழைக்கப்படுகின்றனர்

உலகப் பெருங் காப்பியத்தை இயற்றிய கம்பர் தன்னுடைய இராம காதையில் கவிஞர் எப்படி இருக்க வேண்டும் என வரையறுத்துக் கூறியுள்ளார் கவிஞர் அறிவு மிக்கவராக இருக்க வேண்டும் என அறிஞர் குறிப்பிட்டுள்ளதை

"கவிஞரின் அறிவு மிக்கோய்"

(பரந்தாமனார் -அ கி கவிஞராக.பக்கம் 45 )

"கவிஞரின் அணைய அறிஞ "

(மேலது பக்கம் 45 )

"ஆறிய சிந்தனை அறிஞ"

(மேலது பக்கம் 45 )

என்னும் செய்யுட் தொடரால் அறியலாம்.

கவிஞர் பல பொருள்களையும்

அறிந்து தம்முடைய பாடல்களில்

வெளியிட கூடியவராக இருக்க வேண்டும் அதனை

"கற்பகம் அணைய கவிஞர் "

(மேலது பக்கம் 45) என்னும் செய்யுட் தொடரால் அறியலாம்

இயல் ,இசை ,நாடகம் ஆகிய முத்தமிழிலும் கவிஞர்கள் வல்லவர்களாக இருக்க வேண்டும் என கவியரசர் குறிப்பிட்டுள்ளதை

"முத்த மிழ்த்துறை யின்முறை போகிய

உத்த மக்கவி ஞர்க்கு ஒன்று உணர்த்துவன்"

(சாமி சிதம்பரனார் கம்பராமாயணம் தொகுப்பு

பக்கம் 16 )

என்னும் செய்யுள் தொடரால் அறியலாம்

கவிஞர்கள் இனிய சொற்களை அமைத்துப்

பாடல்கள் பாடக் கூடியவர்களாக இருத்தல் வேண்டும் என்றார் ,அதனை,

"செவ்விய மதுரம் சேர்ந்தன பொருளின் சீரிய கூரிய தீம் சொல் வவ்விய கவிஞர் "

(சாமி சிதம்பரனார் கம்பராமாயணம் தொகுப்பு- பக்கம் -25)

என்னும் கவிதை தொடர் கூறுகிறது

கவிஞர்கள் பல நூல்களைக்

கற்றுத் துறை போனவர்களாகவும்

நல்லியல்பு வாய்ந்தவர்களாகவும் நல்லொழுக்கம் ,

நற்பண்பு மிக்கவர்களாகவும் இருத்தல் வேண்டும் என்பதனை ,

"பல்லியல் உலகுறு பாடை பாடமைந்து

எல்லையில் நூல் கடல் ஏற நோக்கிய நல்லியல் நவை யறு கவிஞர் "

(பரந்தாமனார்

அ. கி .கவிஞராக

(பக்கம் 45 )

என்னும் செய்யுள் தொடர் கூறும்

பாரதியார்

கவிஞர்கள் அனைவரும் நற்பண்பு உள்ளவர்களாக இருந்தால் அவர்களுடைய உள்ளத்தில் எழும் கருத்துக்களும் நல்லனவாய் இருக்கும் .

கவிதையில் நாட்டு மக்கள் நலமுடன் வாழ வேண்டும்

நானிலத்தவர்

மேனிலையுற வேண்டும் இதற்குக் கவிஞன் உள்ளம் நல்லதாய் இருக்க வேண்டுவது இன்றியமையாதது ஆகிறது

கவிஞர்கள் தாம் உணர்ந்த

உணர்ச்சியைக்

கவிதையின் வழியாக வெளிப்படுத்த வேண்டும் அதனைப் படிப்பவர் சுவைத்து மகிழ வேண்டும் என்கின்றார் மகாகவி அதனை ,

"உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்

-----'--'-----'---------

தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார் இங்கமரர் சிறப்புக் கண்டார் "

(பாரதியார் கவிதைகள் பக்கம் -158 )

என்னும் கவிதையால் காணலாம்

பாரதிதாசன்

கவிஞர்களைப் பற்றிப் பாரதிதாசன் புரட்சிக் கவி என்ற கவிதையில் குறிப்பிட்டுள்ளார் அவர் இவ்வுலகில் உள்ள அனைவரும் போற்றக்கூடிய உயர்ந்தவர்கள் கவிஞர்கள் எனக் கூறியுள்ளார் அதனை, ---'----இவ்வுலகோர் போற்றும்

புலவன் உயர் கவிஞன்"

(பாரதிதாசன் கவிதைகள் பக்கம்- 14) என்னும்

கவிதையடிகளால் அறியலாம் .

சாமிநாத சர்மா

வே .சாமிநாத சர்மா அவர்கள் எப்படி வாழ வேண்டும்? என்னும் தமது அரிய நூலில் கவிஞன் எப்படி இருக்க வேண்டும் என்பதைத்தெளிவாகக் கூறியுள்ளார்

"கவிஞன் யார் ?யார் சூரியன் புகாத இடத்தில் எல்லாம் புகுந்து பார்க்கிறானோ பார்த்து அனுபவிக்கிறான் ,

அனுபவித்ததை பிறர் அனுபவிக்கும்படி சொல்கிறானோ அவன்தான் கவிஞன் அவன் வார்த்தைகளுக்கு அப்பாற்பட்டது எதுவோ, வார்த்தைகளினால் அளந்து காட்ட முடியாதது எதுவோ அதை வார்த்தைகளின் நமக்கு அறிமுகப்படுத்தி வைக்கிறான் அதன் தன்மை என்னவென்று நமக்கு உணர்த்தியும் விடுகிறான் என்பர்

அறிஞர்

(பரந்தாமனார் அ.கி கவிஞராக பக்கம் 47)

அப்துல் ரகுமான்

கவிஞன் பற்றி அப்துல்ரகுமான் பார்வை வேறுபட்டுள்ளது அவர் கவிஞனை ஒரு தேனீ போன்று பார்க்கின்றார்

ஈக்கள் பல வகைகளில் உண்டு இவற்றில் ஒன்று தேனீ, தேனீயும் ஈதான் ஆனால் வித்தியாசமான ஈயாக இருக்கிறது மற்ற ஈக்கள் எல்லாம் எப்பொழுதும் கழிவுகளை நாடும் ஆனால் தேனீ மனிதர்கள் மிக உயர்வாக மதிக்கின்ற மலர்களை மட்டும் நாடுகிறது அதனால்தான் மற்ற ஈக்களில் இருந்து தேனீ வேறுபட்டுள்ளது

நல்ல கவிஞன் தேனீயாக இருக்கின்றான் அவன் மானுட மலர்களில் உள்ள தேனைத்

திரட்டுகிறவனாக இருக்கிறான்தேனீக்குத் தேச எல்லை கோடுகள் என்று எந்த வரன்முறையும் இல்லை

கவிஞனுக்கும் தேச எல்லைக் கோடுகள் என்று எதுவும் இல்லை

மனித மலர்களில் இருந்து சாரத்தைப் பற்றி மட்டும் எடுப்பதால் கவிஞனின் கவிதைகள் பொதுமை பெறுகின்றன எனவே அக்கவிதைக்கு

அகிலத் துவம் கிடைக்கின்றது அதனால் அக் கவிஞன் மகாகவி என்றும் போற்றப்படுகின்றார்

"தேனி நாள்தோறும் புது புது பூக்களைத் தேடி சேகரிப்பது போல் கவிஞனும் நாள்தோறும் புதுப்புது கருத்துக்களை சுதந்திரமாக கூறுகின்றான் "

(தொலைப்பேசிக்கண்ணீர்-பக்கம்-16)

அன்றில் கவிஞன்

கவிஞன் என்பவன் ஒன்றை விட்டு ஒன்று பிரியாது வாழம் அன்றில் பறவை போல இலக்கணத்தை விட்டு இம்மியளவும் பிரியாமல் வாழ்பவன் அன்றில் கவிஞன் இதனை ,

"இலக்கணத்தை விட்டு

இம்மியும் பிரியாமல் இருப்பவர்கள் அன்றில் பறவை கவிஞர்கள் "

(பாக்கியராஜ் -கவிக்கோ மணிவிழா மலர்.ப.45)

என்பதினால் அறியலாம்.

அன்னப்பறவைக் கவிஞன்

தண்ணீரில் கலங்கிய பாலை பிரித்துப் பாலை மட்டும் பருகுவது அன்னப்பறவை அதைப்போல பழமை புதுமை கலந்த கருத்துக்கள் அடங்கிய சமூகத்திலிருந்து புதியவைகளை மட்டும் பிரித்து எழுதுபவர் அன்னப்பறவைக் கவிஞன் அதனை,

"பழமை புதுமை கலந்த கருத்துக்கள் அடங்கிய சமூகத்திலிருந்து புதியன விரும்பி

அதை மட்டும் பிரித்தெடுத்து எழுதுபவர்கள்

அன்னப் பறவைக் கவிஞர்கள் "

(பாக்கியராஜ் கவிக்கோ மணிவிழா மலர் -பக்கம்-45)

என்பதனால் அறியலாம்

சாதகப்பறவை கவிஞர்

உலகில் நீர்நிலைகள் பல இருந்தாலும் தன்னுடைய வாழ்நாள் முழுவதும் மண்ணைத் தொடாது மழைத்துளியை மட்டும் தேடிப் பருகக் கூடியது சாதகப்பறவை அதுபோல கவிதை இயற்றுவதற்கு எவ்வளவோ பாடுபொருள் இருந்தாலும் மிக மிக அபூர்வமான கருத்துக்களைத்

தேடித் தேடிப் படைக்கின்ற ஆற்றல் உடையவர்கள் சாதகப்பறவைக் கவிஞர்கள் அதனை ,

"எவ்வளவோ பாடுபொருள் இருந்தாலும் மிக மிக அபூர்வமான கருத்துக்களை

தேடித்தேடி

படைக்கும் ஆற்றல் உடையவர்கள்

சாதகப்பறவை கவிஞர்கள்"

(பாக்கியராஜ் மணிவிழா மலர் பக்கம்-45)

என்பதனால் அறியலாம்

யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்று வாரி வழங்குபவன்

இறை நலம் பெற்ற கவிஞன் ஆவான் தன் உயரிய உணர்வுகளை உலகுக்கு உணர்த்தும் நல்லாசிரியன் கவிஞன் ஆகின்றான்

முனைவர் செ ஹேமலதா உதவிப்பேராசிரியர் சேக்ரட் ஹார்ட் கலை மற்றும் அறிவியல் கல்லூரி

பேரணி